ஸ்ரீ :

# ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் திருக்கோயில்

ராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை,
புதுச்சேரி–3.



## ஐம்பதாவது
## ப்ரஹ்மோத்ஸவ பத்திரிகை

**12-08-2021** முதல் **22-08-2021** வரை

## உத்ஸவ நிகழ்ச்சி நிரல்

| தேதி | கிழமை | காலை | இரவு | |
|---|---|---|---|---|
| 12-08-2021 | வியாழன் | - | அனுக்ஞை - ம்ருத்ஸங்க்ரஹணம் நகர சோதனை, ஸ்ரீ விஷ்வக்ஸேனர் திருவீதி புறப்பாடு | |
| | | | ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் | உடன் புறப்பாடு கண்டருளும் ஸ்ரீ நரசிம்மர் |
| 13-08-2021 | வெள்ளி | த்வஜாரோஹணம் (காலை 6.00 மணிக்கு) | சந்திரப்ரபை | ஸ்ரீ ஜ்வாலா நரசிம்மர் |
| | | விசேஷ ஹோமங்கள் | | |
| 14-08-2021 | சனி | ஸ்ரீ கிருஷ்ண காயத்ரி ஹோமம் "திருமஞ்சனம்" | சூர்யப்ரபை | ஸ்ரீ அஹோபில நரசிம்மர் |
| 15-08-2021 | ஞாயிறு | ஸ்ரீ ஹயக்ரீவ ஹோமம் "திருமஞ்சனம்" | சேஷ வாகனம் | ஸ்ரீ வராஹ நரசிம்மர் |
| 16-08-2021 | திங்கள் | ஸ்ரீ ஸூக்த ஹோமம் "திருமஞ்சனம்" | கருட ஸேவை | ஸ்ரீ மாலோல நரசிம்மர் |
| 17-08-2021 | செவ்வாய் | ஸ்ரீராம காயத்ரி ஹோமம் "திருமஞ்சனம்" | ஹனுமந்த வாகனம் | ஸ்ரீ பார்கவ நரசிம்மர் |
| 18-08-2021 | புதன் | ஸ்ரீ ஸுதர்சன ஹோமம் "திருமஞ்சனம்" | யானை வாகனம் | ஸ்ரீ காரஞ்ச நரசிம்மர் |
| 19-08-2021 | வியாழன் | ஸ்ரீ புருஷஸூக்த ஹோமம் "திருமஞ்சனம்" | சூர்ணோத்ஸவம் கோரதம் | ஸ்ரீ யோகானந்த ஸ்ரீ சத்ரவட நரசிம்மர் |
| 20-08-2021 | வெள்ளி | ஸ்ரீ ந்ருஸிம்ம ஹோமம் "திருமஞ்சனம்" | இந்திர விமானம் | ஸ்ரீ பாவன நரசிம்மர் |
| 21-08-2021 | சனி | ஸ்ரீ ஹயக்ரீவ ஜெயந்தி திருத்தேர், தீர்த்தவாரி (காலை 10.30 மணியளவில்) | த்வாதசாராதனம் - புஷ்பயாகம் - த்வஜாவரோஹணம் பூர்ணாஹுதி - சாற்றுமுறை | |
| 22-08-2021 | ஞாயிறு | - | திருக்கல்யாணம் | |

தினமும் இரவு சாற்றுமுறைக்கு பிறகு டோலோற்சவம் நடைபெறும்.

ஸ்ரீ பாலமுருகன் பிரிண்டர்ஸ், முத்தியால்பேட்டை, புதுச்சேரி-3. போன் : 2235456 செல் : 9442891981

ஸ்ரீ:

ஸ்ரீ மதே லக்ஷ்மி ஹயவதன பரப்ரம்மனே நம :
ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம :

# ப்ரஹ்மோத்ஸவ பத்திரிகை

நமோ வாசே நமோ வாசஸ் பதயே !
நமோ விஷ்ணவே ப்ருஹதே கரோமி ! - யஜுர்வேதம்

அஸாஹஸோ அநபாய ஸ்ரீ : ஸஸஹாய : ஸ்ரியைவஸந் !
ஸ்ரீ மாந்நாராயணோ வாஸுதேவோஅவ்யாத் விஷ்ணுருத்தம : !!
- ஹயக்ரீவ சகஸ்ர நாமம்

ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் !
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே !!
- ஸ்ரீ வேதாந்த தேசிகர்

முன்னிவ்வுலக கேழுமிருள் மண்டி யுண்ண
முனிவரோடு தானவர்கள் திசைப்ப வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாயருளிய வெம் பரமன் காண்மின்.

செந்நெல்மலி கதிர்க்கவரி வீசச் சங்கம்
அவை முரலச் செங்கமல மலரை ஏறி
அன்னமலி பெடையோடும் அமரும் செல்வத்
தணியமுந்தூர் நின்று கந்த அமரர் கோவே. - திருமங்கையாழ்வார்

திருவோணத்தான் உலகாளும் என்பார்களே. - பெரியாழ்வார்

ஸ்ரீ :

ஸ்ரீய : பதியாய் அவாப்த ஸமஸ்த காமனாய் ஸர்வ கல்யாண குணாத்மனாய் தன்னை வந்து ஸேவிக்கும் அடியார்கட்கு தமதனைத்தும் அவர் தமக்கும் வழங்கி "வைகுண்ட வாஸேபி நமேபிலாஷ" என்ற ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் திவ்ய ஸுக்தியை நினைவூட்டும்

**ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு**

நாளது பிலவ வருடம் ஆடி மாதம் 27-ம் தேதி (12-08-2021) தொடங்கி ப்ரஹ்மோத்ஸவம் நிகழ்ச்சி நிரலில் கண்டபடி வேதபாராயண திவ்ய பிரபந்த ஸேவையுடன் நடக்கிறது. வேறு எங்கும் காணக்கிடைக்காத வகையில் பரிமுகமாயருளியவாறே, திருவீதியில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவர் வாகனங்களில் எழுந்தருள்கிறார். "அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன்" என்று ஆழ்வார் அருளியபடி, ஆவணி ஹஸ்தத்தில் தொடங்கி "நீ பிறந்த திருவோணம்" என்றபடி, ஆவணி – திருவோணத்தில் திருத்தேர் உத்ஸவம் கண்டருள்கிறார். ஸ்ராவணம் : நக்ஷத்ர ஏற்றம், கேட்பதில் ஏற்றம், வழிபாட்டில் ஏற்றம், அறிவில் ஏற்றம், வேதத்தால் பெருமையுடைய ஏற்றம் என்ற பல பொருள்தரும் (ஸ்ராவண) ஆவணி மாதத்தில் மேற்கண்ட எல்லாவிதமான ஏற்றங்களையும், நமக்கு நவவிதமாய் நல்கிடவே, ப்ரஹ்மோத்ஸவம் கண்டருள்கிறார்.

ப்ரஹ்மோத்ஸவத்தின்போது பெருமாளின் நியமனத்தின்பேரில் ஸர்வலோக யோகக்ஷேமத்திற்காக பத்து நாட்களும் தினமும் காலை, மாலை இருவேளையும் ஹோமம் செய்வதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் தினமும் காலை திருமஞ்சனம், வேதபாராயண திவ்ய பிரபந்த ஸேவை, சாற்றுமுறை, இரவு வேதபாராயண திவ்ய பிரபந்த ஸேவை, பெருமாள் வாகனங்களில் திருவீதி புறப்பாடு, நம் சன்னதியில் எழுந்தருளியிருக்கும் நவநரசிம்மர்களில் தினமும் ஒரு நரசிம்மர் (ஸ்ரீஜ்வாலா நரசிம்மர் முதல் ஸ்ரீசத்ரவட நரசிம்மர் வரை) புறப்பாடு, திவ்யநாம பஜனை, சாற்றுமுறை, டோலோற்சவம் நடைபெறும். உதவ விரும்பும் ஆன்மீக அன்பர்கள் பொருளாகவோ அல்லது நிதியாகவோ அளித்து ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் மற்றும் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம பெருமாளின் பரிபூர்ண கடாக்ஷத்தை பெறுமாறு பிரார்த்திக்கிறோம்.

தாங்கள் அளிக்கும் நன்கொடைக்கு ரசீது அளிக்கப்படும்.

இங்ஙனம்,

ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் பக்த ஜன சபையார்
ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் கோயில் சிறப்பு அதிகாரி
ஸ்ரீ லக்ஷ்மி சரஸ் மாருதி டிரஸ்ட்